மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட பாகுபாடு கொடுத்து கேள்வி கேட்பது என்றால், எல்லோருமே எம்.பி. பி.எஸ்.லே தான் சேருவோம் என்று கேட்பார்கள். அது மிகவும் சிரமம் அளிக்கும். எந்த வகுப்பில் படிப்பது போன்றவற்றை முடிவு செய்ய வேண்டியது மாணவர்களுடைய பொறுப்பாகும்.

உலகப் பல்கலைக் கழக உதவிப்பணி நிறுவனம்.

* 392 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவ, மாணவியர்களுக்கு உதவும் வகையில் உலகப் பல்கலைக் கழக உதவிப்பணி (World University Services Centre) நிறுவனம் ஏதேனும் செயல்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில் இது எப்போது முதல் செயல்பட்டு வருகிறது?

(உ) இது மாணவர்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவி புரிகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1951-ம் ஆண்டு முதல்.

(உ) சென்னையில் உள்ள உலகப் பல்கலைக் கழக உதவிப்பணி மையத்தின் கட்டிடத்தில் மாணவர்களுக்காக தங்கும் வசதி, உணவு விடுதி, வைத்திய வசதி, புத்தகங்களைக் கடனாகப் பெற்று படிக்கும் வசதி அளிப்பதுடன் அங்கு ஒரு கூட்டுறவு விற்பனை நிலையமும் இயங்கி வருகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்திற்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா? இந்த நிறுவனத்தை மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவாக்க அரசு முயற்சி யெடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான கட்டடங்களைக் கட்டுவதற்கான இடத்தை இலவசமாக அரசு தந்திருக்கிறது. அதைத்தவிர ஒன்றரை லட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்து உதவப்பட்டிருக்கிறது. அதைத் தவிர டேனிஷ் அரசாங்கம் 16 இலட்சம் ரூபாய் வரையில் கட்டடங்கள் எழுப்புவதற்காக என்ற முறையிலே தந்திருக்கிறது. இந்த வகையிலே மாநில அரசால் எந்தெந்த அளவிற்கு உதவிசெய்ய இயலுமோ அதைச் செய்துவருகிறது. இதையெல்லாம் தனிக்குழுவினர் தான் கவனிக்க வேண்டும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்தான் துணைவேந்தர் என்ற முறையிலே அந்தக் குழுவிற்குத் தலைவராக இருக்கிறார். சென்னையில் உள்ள கல்லூரிகளின் முதல்வர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஒரு கல்லூரி மாணவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தக் குழுவிலே இடம்பெற்றிருக்கிறார். மற்ற மாவட்டங்களுக்கு அதை விரிவுபடுத்துவதைப்பற்றி நேஷனல் கவுன்சிலும், இந்த மாநிலக் கவுன்சிலும்தான் முடிவு செய்ய வேண்டும்.

1974 மார்ச் 13]

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த செண்டருக்கான நிதிவசதிகளை யார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ? அரசு கொஞ்சம் பணம் கொடுக்கிறது. டேனிஷ் நிறுவனம் கொடுக்கிறது என்று சொன்னார்கள். எங்கெங்கே யிருந்து நிதி அதற்குத் தரப்படுகிறது ? ஐ.நா. நிறுவனத்திடமிருந்து பண உதவி இதற்குத் தரப்படுகிறதா என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழு விவரங்கள் அதைப் பற்றி கிடைக்கவில்லை. மாணவர்களுக்கு வசதிகள் செய்வதற்கு Madras Committee of the World University Service என்று இருக்கிறது, "Indian National Committee of the World University Service" என்று இருக்கிறது. இவற்றிற்கு ஐ.நா.வின்சார்பிலே ஓரளவுக்கு உதவி கிடைக்கலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிய முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை. மாணவர்கள் தங்குவதற்காக வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற் காக ஒரு வாடகைத் தொகை வசூலித்து அதன்மூலம் சரிக்கட்டுகிறார்கள். அதைத்தவிர, அடக்கவிலைக்கு பொருள்களைக் கொடுக்கக்கூடிய முறையிலே கூட்டுறவு முறையிலே சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். மற்ற என்ன என்ன வகைகளிலே நிதி வசதிகள் தரப்படுகின்றன என்ற விவரம் வேண்டுமானால் தனிக்கேள்வி கேட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எக்மோரிலே இருக்கின்ற வொர்ல்ட் யூனிவர்சிடி சர்வீசில் பரீட்சையில் தேறாத மாணவர்களும் தங்கியிருக்கிறார்கள் என்று பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் வருகின்றனவே, அதையெல்லாம் தடுக்கக்கூடிய முறையிலே கல்லூரி முதல்வர்களை அரசு கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி வற்புறுத்துகின்ற நிலைமை அரசுக்கு இல்லை. அந்தக் குழுவினர் தான் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

Grants to Bala Vihar

* 393 *Q.*—THIRU G. R. EDMUND :
THIRU N. K. PALANISAMY : } Will the Hon the Minister for Education and Tourism be pleased to state :—

(*a*) whether the Government have issued orders providing full grants to Bala Vihar, an Institution for the mentally retarded in Madras City ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the details of other facilities offered to the Institution ?